நகராட்சி அலுவலகம்
அம்பாசமுத்திரம்
நாள்.31.12.2020

**சாதாரணக்கூட்டம்**

அம்பாசமுத்திரம் நகர் மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2020ம் வருடம் டிசம்பர் மாதம் 31ம் தேதி (31.12.2020) வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு தனி அதிகாரி அவர்கள் தலைமையில் மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெறும்.

தனி அலுவலர்/ஆணையாளர்(பொ)
அம்பாசமுத்திரம் நகராட்சி

| Date of Council | Decision No. | Subject in Agenda | Decision of Council |
|---|---|---|---|
| 31.12.20 | 801 | **பொருள் எண்:1**<br>அம்பாசமுத்திரம் நகராட்சியில் சுப்பிரமணியபுரம் தரைமட்ட நீர்த்தேக்க தொட்டியில் Liquid Chlorination அமைக்கும் பணியினை 15வது மத்திய நிதி குழு ஆணைய பரிந்துரை நிதி 2020–21ன் கீழ் மேற்கொள்ள பணியினை தேர்வு செய்தும், மேற்காண் பணி மேற்கொள்ள இந்நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.5.50 இலட்சம் மன்றத்தின் பார்வைக்கும், பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும்.<br>(ந.க.எண்:1874/2020/இ1) | அனுமதிக்கப் பட்டது |
| 31.12.20 | 802 | **பொருள் எண்:2**<br>அம்பாசமுத்திரம் நகராட்சியில் கோடாரன்குளம் தூய நீரேற்றும் நிலையத்தில் உள்ள Rapid sand Filter Bed புனரமைத்து மேம்பாடு செய்யும் பணியினை 15வது மத்திய நிதி குழு ஆணைய பரிந்துரை நிதி 2020–21ன் கீழ் மேற்கொள்ள பணியினை தேர்வு செய்தும், மேற்காண் பணி மேற்கொள்ள இந்நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.10.00 இலட்சம் மன்றத்தின் பார்வைக்கும், பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும்.<br>(ந.க.எண்:1874/2020/இ1) | அனுமதிக்கப் பட்டது |
| 31.12.20 | 803 | **பொருள் எண்:3**<br>அம்பாசமுத்திரம் நகராட்சியில் சுடலைகோவில் நீரேற்று நிலையத்தில் உள்ள மூன்று Infiltration wellல் உள்ள 25 HP Submersible motors, ராமர் கோவில் நீரேற்று நிலையத்தில் உள்ள ஒரு Infiltration wellல் உள்ள 20 HP Submersible motors மற்றும் கோடாரன்குளம் இயல்பு நீரேற்று நிலையத்தில் உள்ள 20 HP Submersible motor புதிதாக பொருத்தி மேம்பாடு செய்யும் பணியினை 15வது மத்திய நிதி குழு ஆணைய பரிந்துரை நிதி 2020–21ன் கீழ் மேற்கொள்ள பணியினை தேர்வு செய்தும், மேற்காண் பணி மேற்கொள்ள இந்நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.27.50 இலட்சம் மன்றத்தின் பார்வைக்கும், பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும்.<br>(ந.க.எண்:1874/2020/இ1) | அனுமதிக்கப் பட்டது |
| 31.12.20 | 804 | **பொருள் எண்:4**<br>அம்பாசமுத்திரம் நகராட்சியில் வார்டு எண் 4 ஊர்காடு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி முதல் சாட்டுபத்து சாலை (நெல் ஆராய்ச்சி பண்ணை அருகே) வரை 150mm Dia DI Pipe k7 பகிர்மான குழாய் அமைத்தல், 14வது வார்டு திருவள்ளுவர் நகர் மெயின் ரோடு, பண்ணை சங்கரய்யர் நகர் தெற்கு கடைசி தெரு, 6வது வார்டு புதுகிராமம் சேனையர் கீழ தெரு மற்றும் 13வது வார்டு அட்டை கம்பெனி சாலையில் 90mm Dia PVC 6kg பகிர்மான குழாய் விஸ்தரிப்பு செய்யும் பணியினை 15வது மத்திய நிதி குழு ஆணைய பரிந்துரை நிதி 2020–21ன் கீழ் மேற்கொள்ள பணியினை தேர்வு செய்தும், மேற்காண் பணி மேற்கொள்ள இந்நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.14.00 இலட்சம் மன்றத்தின் பார்வைக்கும், பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும்.<br>(ந.க.எண்:1874/2020/இ1) | அனுமதிக்கப் பட்டது |
| 31.12.20 | 805 | **பொருள் எண்:5**<br>அம்பாசமுத்திரம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள 84AH பேட்டரி 12 எண்ணம், 42 AH பேட்டரி 16 எண்ணம் புதிதாக பொருத்தும் பணியினை தேர்வு செய்தும், அப்பணிக்கு நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.1,72,000/– மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் . உத்தேச செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக.<br>(ந.க.எண்.1754/2020/இ1) | அனுமதிக்கப் பட்டது |
| 31.12.20 | 806 | **பொருள் எண்:6**<br>அம்பாசமுத்திரம் நகராட்சியில் வரிவசூல் பணியினை கருத்திற்கொண்டு, காலியிடமாக உள்ள வருவாய் ஆய்வாளர் பணியிடத்திற்கு, கடையநல்லூர் நகராட்சியில் உதவியாளராக பணிபுரியும் திரு.வி.மாரிச்சாமி என்பவரை கூடுதல் பொறுப்பாக பணி பார்க்க திருநெல்வேலி, நகராட்சிகள் நிர்வாக மண்டல இயக்குநர் அவர்கள் உத்தரவிட்டதை எதிர்த்து, அம்பாசமுத்திரம் நகராட்சி உதவியாளர் திரு.ராமசுந்தரமணி என்பவர் சென்னை, உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண்.W.P9(MD)17791/2020 நம்பராக வழக்கு தொடுத்துள்ளார். மேற்படி வழக்கிற்கு அம்பாசமுத்திரம் நகராட்சி சார்பாக கோர்ட்டில் ஆஜராகி வழக்கினை நடத்தும் வகைக்கு கேட்பு தொகையாக ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) திரு.எம்.ராஜராஜன் என்பவருக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்காக. | அனுமதிக்கப் பட்டது |

<table>
<tr>
<td>31.12.20</td>
<td>807</td>
<td>
பொருள் எண்: 7<br>
அம்பாசமுத்திரம் நகராட்சிக்குட்பட்ட பொது சுகாதாரப்பிரிவு வாகனம் எண். TN76AX4307TATA ACE, TN76C4305 ஆகியவற்றை பழுது நீக்கம் செய்ய வேண்டி 14.12.2020ம் தேதி கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குபட்டியல் கீழ்க்கண்ட விபரப்படி உள்ளது. குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளியினை அங்கீகரிக்கவும், பட்டியல் தொகையினை பொதுநிதியில் வழங்கிடவும் மன்றத்தின் அனுமதிக்காக.
<table>
<tr><th>வ. எண்</th><th>வேலையின் விபரம்</th><th>New Star Auto mobiles, Tirunelveli</th><th>Sundaram Motors, Tirunelveli</th><th>Vetrvel Labour works Tiruvelveli</th></tr>
<tr><td>1</td><td>பொது சுகாதாரப்பிரிவு வாகனம்எண். TN76AX4307 TATA ACE, TN76C4305 பழுது நீக்கம் செய்தல்</td><td>25380<br>33325</td><td>26950<br>34630</td><td>27035<br>35650</td></tr>
</table>
</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
<tr>
<td>31.12.20</td>
<td>808</td>
<td>
பொருள் எண்: 8<br>
அம்பாசமுத்திரம் நகராட்சிக்குட்பட்ட பொது சுகாதாரப்பிரிவு வாகனம் எண். TN76AX4313 TATA ACE, TN76C8482 ஆகியவற்றை பழுது நீக்கம் செய்ய வேண்டி 18.12.2020ம் தேதி கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குபட்டியல் கீழ்க்கண்ட விபரப்படி உள்ளது. குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளியினை அங்கீகரிக்கவும், பட்டியல் தொகையினை பொதுநிதியில் வழங்கிடவும் மன்றத்தின் அனுமதிக்காக.
<table>
<tr><th>வ. எண்</th><th>வேலையின் விபரம்</th><th>Sri Jayaram Motor Works, Ambasa mudram</th><th>Sree Srinivasa Motor Works, Ambasa mudram</th><th>Arasan Machinery Service, Tiruvelveli</th></tr>
<tr><td>1</td><td>பொது சுகாதாரப்பிரிவு வாகனம்எண். TN76AX4313 TATA ACE, TN76C8482 பழுது நீக்கம் செய்தல்</td><td>6600<br>10450</td><td>7950<br>11250</td><td>8900<br>12550</td></tr>
</table>
</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
<tr>
<td>31.12.20</td>
<td>809</td>
<td>
பொருள் எண்: 9<br>
அம்பாசமுத்திரம் நகராட்சியில் பொதுநிதி 2020–2021ன் கீழ், அலுவலக வளாக ஆணையாளர் அறையினை விஸ்தீரணம் செய்து மேம்பாடு செய்யும் பணிக்கு 16.12.2020ம் தேதி ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் குறைவான ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தபுள்ளிதாரருக்கு வேலை உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.
<table>
<tr><th>வ எண்</th><th>பணியின் பெயர்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீட்டு விகித விவரம்</th></tr>
<tr><td rowspan="2">1</td><td rowspan="2">அம்பாசமுத்திரம் நகராட்சி அலுவலக வளாக ஆணையாளர் அறையினை விஸ்தீரணம் செய்து மேம்பாடு செய்யும் பணி<br>(மதிப்பீடு ரூ 3.75 இலட்சம்)</td><td>திரு.U.மணி, கல்லிடைகுறிச்சி</td><td>0.18% மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>திரு.N.சந்திரசேகர், பொட்டல்</td><td>0.78% மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
</table>
</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
<tr>
<td>31.12.20</td>
<td>810</td>
<td>
பொருள் எண்: 10<br>
சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை எண். 19775/ஜே2/2019–3, நாள்.15.12.2020ன்படியும், திருநெல்வேலி, நகராட்சிகள் நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் 23.12.2020 தேதிய தொலைபேசி செய்தியின்படியும், அம்பாசமுத்திரம் நகராட்சிக்குட்பட்ட இடங்களில் முடிதிருத்தம் / அழகு நிலையம் / ஸ்பா / மசாஜ் நிலையம் நடத்துவோர் நகராட்சி அலுவலகத்தில் விண்ணப்பம் செய்து ஆணையரிடமிருந்து உரிமம் பெற்றுக்கொள்ள தெரிவிப்பதற்கான அறிவிப்பினை, தினசரி தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழில் விளம்பரம் செய்திடவும், அதற்கான செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்காக.
</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 31.12.20 | 811 | **பொருள் எண்: 11**<br>அம்பாசமுத்திரம் நகராட்சி அலுவலக ஆணையாளர் மற்றும் பணிபுரியும் அனைத்து பிரிவு பணியாளர்களும் அலுவலக பணி நிமித்தமாக செல்லும் பயிற்சிகள் மற்றும் கூட்டங்களுக்கு செல்லும் பயணங்களுக்கு அவர்களின் ஊதிய அடிப்படையில் 2020–21 வருடத்திற்கான பயணப்படிகள் வழங்கிடவும், செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்காக. | அனுமதிக்கப் பட்டது |
| 31.12.20 | 812 | **பொருள் எண்: 12**<br>திருநெல்வேலி, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் சாலை பாதுகாப்பு கூட்டப்பொருளில் அம்பாசமுத்திரம் பகுதியிலுள்ள சாலைகளில் கால்நடைகள் சுற்றித்திரிவதால் போக்குவரத்து மற்றும் பொதுமக்களுக்கு இடையூராக உள்ளதாகவும் இதனால் சாலை விபத்துக்கள் ஏற்படுவதாலும் அதனை அப்புறப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு ஆடு மாடுகளை தங்கள் வீட்டில் கட்டி போட்டு பராமரிக்கவும், மீறி சாலைகளில் சுற்றித்திரியும் மாடு ஒன்றுக்கு ரூ.5000/– அபராதமும் ஆடு ஒன்றுக்கு ரூ.2000/– அபராதமும் விதிக்கப்படும் எனவும் அதற்கு பின்பு, சாலைகளில் சுற்றித்திரியும் மாடு மற்றும் ஆடுகளை பிடித்து கோசாலையில் ஒப்படைக்கப்படும் எனவும் பொதுமக்களுக்கு எச்சரிப்பு வழங்கிட தினசரி நாளிதழ் மற்றும் ஆட்டோ மூலம் விளம்பரம் செய்திட மன்றத்தின் அனுமதிக்காக. | அனுமதிக்கப் பட்டது |